

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.12.2024) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அரசு போட்டித்தேர்வுகளுக்காக சிறப்பாக பயிற்சியளித்தல் மற்றும் இளைஞர்கள் அதிக அளவில் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற செயல்பட்டதற்காக திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரே.சுரேஷ் அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயத்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன் (திருப்பூர்), கே.இ.பிரகாஷ் (ஈரோடு), திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களின் மகள் ருசிதாஸ்ரீ – அவினாஷ் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் ஈரோட்டில் நேற்று பங்கேற்று மணமக்கள் இருவரும் கலைஞரும் – தமிழும் போல, கழகத்தலைவரும் – உழைப்பும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தார். உடன் அமைச்சர்கள் வி.செந்தில் பாலாஜி, மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.









துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணி சார்பில் சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகத்தை திறந்து வருவதன் தொடர்ச்சியாக, திருப்பூர் வடக்கு மாவட்டம் – திருப்பூர் தெற்கு மாநகரம், திருப்பூர் தெற்கு தொகுதிக்கான 'கலைஞர் நூலகத்தை' சூர்யா நகர் பகுதியில் நேற்று திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். இதில் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



இனமான பேராசிரியரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் இரயில் நிலையம் முன்பு வைக்கப்பட்டிருந்த பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாட்ட செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் இ.கே.பிரகாஷ், மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



டெல்லியில் உள்ள நாடாளுமன்ற கழக அலுவலகத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த இந்தியா கூட்டணி எம்.பிக்கள், பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் 300 பயனாளிகளுக்கு ரூ.9.45 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், கே.இ.பிரகாஷ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்தி புரியாத உறுப்பினர்களுக்கு

# ஆங்கில மொழி பெயர்ப்பு வசதி தேவை!

## மக்களவையில் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 21 - 'இந்தி புரியாத உறுப்பினர்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பு வசதி செய்து தர வேண்டும் என்று மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது:

பாராளுமன்றத்தில் அறிமுக படுத்தப்படும் மசோதாக்களின் விளக்கவுரை கூட்டத்தில் இந்தியில் மட்டுமே கலந்துகொண்ட உறுப்பினர்கள் பேசினர்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்கள் இந்தி பேசாத மாநிலங்களில் இருந்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ள ஆங்கிலத்தில் கருத்துகளை பேசும் வசதியை செய்து தர வேண்டும்,

என்னால் இந்தியில் பேசும் செய்திகளை புரிந்து கொள்ள முடியவில்லை - எனவே மொழிபெயர்ப்பு வசதி இருந்தும் அதனை ஏன் செய்யவில்லை என்று எதிர்ப்பு தெரிவித்தார்.


